DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, COONOOR
**Case No: CC.14/2025**
Prosecution witness- **PW.1 (LW.1)**

| | | | |
|---|---|---|---|
| Name | : Sundari | Caste | : |
| Father Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |
| Time | : 12:15 pm to 12:30 pm | | |

**(Accused A1 to A4 present. Respective accused counsel present)**
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 08.04.2025

08.04.2025 முதல்விசாரணை

நான் குன்னூர் கொல்லிமலை ஓரநள்ளியில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் 1, 4 எதிரிகளை எனக்கு தெரியும். அதில் 1ம் எதிரி மேகநாதன் எனது மகளின் மைத்துனர் ஆவார். 2ம் எதிரி நதியா மேகநாதனின் மனைவி ஆவார். 3ம் எதிரி ஹாலம்மா நதியாவின் தாயார் ஆவார். 4ம் எதிரி லட்சுமணன் நதியாவின் அப்பா ஆவார். இந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியும்.

1) சுமார் ஏழு வருடங்களுக்கு முன்பாக மார்ச் மாதத்தில் ஒருநாள் மாலை 04.00 மணிக்கு எனது வீட்டில் எனது பேரப்பிள்ளைகளை நான் பார்த்துக் கொண்டிருந்தபோது ஆஜர் 1 முதல் 4 எதிரிகளின் சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்தபோது எதிரிகள் தங்களது கையில் பெரிய தடியை வைத்துக்கொண்டு ஆயட்டியிலுள்ள தோட்டம் ஜெகதாம்பாளுக்கு சொந்தமா என்று கேட்டு 1ம் எதிரி மேகநாதன், 3ம் எதிரி ஹாலம்மா, 4ம் எதிரி லட்சுமணன் என்னை அடித்து கீழே தள்ளி எனது மார்பு மற்றும் வயிற்றில் எட்டி எட்டி உதைத்தார்கள்.

2) நான் எனது இடதுகையால் தடுத்தபோது 4ம் எதிரி லட்சுமணன் 2ம் எதிரி நதியாவின் கையில் வைத்திருந்த தடியை வாங்கி என்னை அடித்ததில் இடது நடுவிரலில் எலும்புமுறிவு ஏற்பட்டு வீக்கக்காயம் ஏற்பட்டது. எதிரிகள் எங்கள் வீட்டு ஜன்னலை தடியை வைத்து அடித்து உடைத்தார்கள். எனது சத்தத்தை கேட்டு சசி

மற்றும் சங்கரன் ஆகியோர் சம்பவஇடத்திற்கு வந்து எதிரிகளை பார்த்து கேள்வி கேட்டவுடன் எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டார்கள்.

3) சம்பவசமயத்தில் எனது கணவர் சிவநஞ்சப்பா வெளியில் இருந்தார்.அவருக்க தகவல் கொடுத்து அவர் வந்ததும் எங்கள் கிராமத்திலிருந்த ஒரு வண்டியை எடுத்துக்கொண்டு குன்னூர் அரசு மருத்துவமனைக்க சிகிச்சைக்காக வந்து சேர்ந்தேன். அங்கு வைத்து போலிசார் என்னை விசாரித்து புகார் வாக்கும்லம் பதிவுசெய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் கண்டுள்ளது எனது கையொப்பம் தான். **(அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** என்னிடம் காட்டப்படும் தடிகளை கொண்டு தான் எதிரிகள் என்னையும் எனது வீட்டு ஜன்னல் கண்ணாடிகளையும் அடித்து உடைத்தார்கள். **(சுமார் 94 செமீ நீளமுள்ள மேல்பக்கம் சுமார் 15 செமீ சுற்றளவு கொண்ட மரத்தடி ஒன்று அ.சா.பொ.1 ஆகவும், சுமார் 120 செமீ நீளமும் மேல்பக்கம் சுமார் 10 செமீ சுற்றளவு கொண்ட மரத்தடி அ.சா.பொ.2 ஆகவும், 101 செமீ நீளம் உள்ள மேல்பக்கம் 12 செமீ சுற்றளவு உள்ள மரத்தடி ஒன்று அ.சா.பொ.3 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

4) என்னிடம் காட்டப்படும் உடைந்த கண்ணாடித்துண்டுகள் தான் எங்கள் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் ஆகும். **(ஒழுங்கற்ற வடிவமுள்ள கருப்பு நிற கண்ணாடித்துண்டுகள் (ஏழு வரிசைகள்) அ.சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(சாட்சிக்கு படுக மொழி மட்டுமே தெரியும் என்பதால் நீதிமன்றத்தில் ஆஜரிலிருந்த இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத வழக்கறிஞர் திரு.டி.கே.தேவராஜ் அவர்கள் மூலம் படுக மொழியில் சாட்சி கூறிய சாட்சியத்தை தமிழில் மொழிபெயர்த்து கூறியதை பதிவு செய்யப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை</u> - **(வாய்ப்பளித்தும் இல்லை)**

/ஒப்பம்/ R.அப்துல் சலாம்

நீதித்துறை நடுவர், குன்னூர்